**வணிக வழக்குக்கான சார்பு நீதிமன்றம்,**
**ஸ்ரீ னிவாசபுரம், காந்திபுரம்,**
**கோயம்புத்தூர்.**

C.O.S.No. 56 Of 2025

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 13- வது நாள் வியாழக்கிழமை 1969ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின் **திரு.சி.பி.வேதகிரி.,பி.பார்ம்.,எம்எஸ்-ஐடி(ஆஸ்திரேலியா).,எல்எல்எம்.,** நீதிபதி, வணிக நீதிமன்றம், (சார்பு நீதிபதி), கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. K.S. அஸ்வின் | கிராமம்: | |
| க.பெ. (அ)<br>த.பெ. | திரு. ஸ்ரீ குமரன் | வேலை: | பார்ட்னர்,<br>AR அலாய்ஸ். |
| வயது | 39 | செல்போன் எண் | |

வா.சா.1 **திரு. K.S. அஸ்வின்** ஆக 13.11.2025 அன்று ஆஜராகி

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் வாதி. எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை எழுத்துபூர்வமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் உண்மைதான்.சங்கதிகளை நான் அறிவேன். நிரூபண வாக்குமூலத்தில் நான் கையொப்பமிட்டுள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

1. 25.05.2018 - வாதியின் நிறுவனம் பதிவு செய்ததற்கான சான்றிதழ் - நகல் - **Ex.A1** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

2. 18.05.2018 – கூட்டாண்மை நிறுவனத்தின் ஆவணம் - நகல் - **Ex.A2** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

**(Ex.A2** – Partnership deed அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது)

3. 27.08.2021 & 14.09.2018 – MSME and GST ஆவணம் - இ நகல் - **Ex.A3** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

4. 08.08.2023 – விற்பனை பட்டியல் - இ நகல் - **Ex.A4** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

5. 14.08.2023 – பிரதிவாதி அனுப்பிய ரிட்டர்ன் இன்வாய்ஸ் - நகல் - **Ex.A5** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

6. வெவ்வேறு தேதிகளில் வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையிலான இமெயில்கள் - இ நகல் - **Ex.A6** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

7. 22.04.2024 - வாதி சுந்தராபுரம் காவல் நிலையத்தில் கொடுத்த ஆன்லைன் புகார் - இ நகல் - **Ex.A7** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

8. 25.05.2024 – வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு - அலுவலக நகல் - **Ex.A8** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

9. 27.05.2024 – ஒப்புதல் அட்டை - அசல் - **Ex.A9** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

10. 31.05.2024 – பிரதிவாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு - அசல் - **Ex.A10** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

11. 09.09.2024 – மீடியேசன் ரிப்போர்ட் - அசல் - **Ex.A11** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

உங்கள் நிறுவனம் எங்கு செயல்பட்டு வருகிறது என்றால் சின்னவேடம்பட்டியில் 2018 ல் இருந்து இயங்கி வருகிறது. உங்கள் நிறுவனத்திற்கு GST எண் உள்ளதா என்றால் உள்ளது பதிவு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 கூட்டாண்மை ஆவணத்தைக் கொண்டு GST பதிவு செய்யப்பட்டதா என்றால் ஆமாம். GST பதிவு செய்தால் தான் தமிழ்நாட்டில் தொழில் செய்ய இயலும் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் GST எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், வா.சா.ஆ.3 MSME ஆவணம் ஆகும். சட்டப்படியாக GST எண் பெற்று வியாபாரம் செய்து வருவதை ஊர்ஜிதம் செய்ய நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், GST சான்றிதழ் உள்ளது. பிரதிவாதி நிறுவனத்துடன் நீங்கள் எப்போதிலிருந்து வியாபாரம் செய்து வருகிறீர்கள் என்றால் கடந்த பிப்ரவரி 2023 ல் இருந்து செய்து வந்தோம், அப்போது அவர்கள் நிறுவனம் வேறு பெயரில் இருந்தது. பிரதிவாதி நிறுவனம் உங்கள் நிறுவனத்திடம் Purchase செய்த அனைத்து Order -களின் அடிப்படையில் Delivery எடுக்கப்பட்ட Purchase களுக்கு பிரதிவாதியின் வங்கி கணக்கு ( IMPS/ RTGS/ NEFT) மூலமாக மட்டுமே அனைத்து தொகைகளையும் செலுத்தி உள்ளார் என்றால் வங்கி கணக்கு மூலமாகவும், காசோலை மூலமாகவும் செலுத்தி உள்ளார். காசோலை மூலம் எந்த காலகட்டத்திலும் பிரதிவாதி உங்களுக்கு தொகையை செலுத்தியது இல்லை, வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறீர் என்று சொன்னால் சரியல்ல. கடந்த 25.05.2024 தேதியிட்ட வா.சா.ஆ.8 வழக்கறிஞர் அறிவிப்பில் வா.சா.ஆ.4 ல் குறிப்பிட்டுள்ள Invoice No. குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் Invoice No. குறிப்பிடப்படவில்லை ஆனால் Invoice தேதியும், தொகையும் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.8 வழக்கறிஞர் அறிவிப்பில் வா.சா.ஆ.4 ல் குறிப்பிட்டுள்ள Supply செய்யப்படுவதாக சொல்லப்படும் Materials விவரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.8 ல் எந்த வகையில் Materials Supply செய்யப்பட்டது, Transport Particulars குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.8 பக்கம் 3 ல் மூன்று காசோலைகள் மூன்று வெவ்வேறு தொகைக்காக கொடுக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த காசோலைகளின் வங்கி விவரம், தேதி, யாருக்கு எந்த தேதியில் வழங்கப்பட்டது போன்ற விவரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.8 பக்கம் 5 ல் பிரதிவாதி அளித்த காசோலைகள் "Payment stopped by the drawer" என வங்கிக்கு அறிவுறுத்தப்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். பிராதில் பிரதிவாதி அளித்ததாக சொல்லப்படும் காசோலைகளை stop Payment கொடுத்ததாக குறிப்பிட்டு சொல்லி உள்ளீர்களா என்றால் அப்படி சொல்லவில்லை Fund insufficient என்று சொல்லி உள்ளோம். வா.சா.ஆ.7 புகார் ரசீதில் பிரதிவாதி நிறுவனம் உங்களிடம்

Material வாங்கிவிட்டு பணம் தரவில்லை என குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் பிரதிவாதியின் பெயரை குறிப்பிட்டுள்ளோம். அதேபோல் வா.சா.ஆ.7 ல் எந்த invoice அடிப்படையில், எந்த பொருள் சப்ளை செய்ததற்கு பணம் தரவேண்டும் என குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், இரும்பு Rod என குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதிவாதி நிறுவனத்தின் உரிமையாளர் பெயர் வடமலை முத்து ராமகிருஷ்ணன் என்பது எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ-7 ல் வடமலை முத்து ராமகிருஷ்ணன் என குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் ராமகிருஷ்ணன் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.7, வா.சா.ஆ.4 ல் குறிப்பிடப்பட்டுள்ள Invoice No., அல்லது தேதியோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-7 ல் புகார் அளித்தது வாதி நிறுவனம் என குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் என் பெயர் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.7 புகார், வா.சா.ஆ.8 வழக்கறிஞர் அறிவிப்பிற்கு முன்னதாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ல் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று காசோலைகள், தொகைகளுக்கு தனிப்பட்டு காசோலை வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. பிராது பக்கம் 3 பத்தி 3 ல் கடந்த 07.08.2023 ல் Purchase order என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது, பிரதிவாதி இமெயில் மூலமாக அனுப்பினார். 07.08.2023 ல் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் Purchase order ஐ இமெயில் மூலமாக பெறப்பட்டதாக பிராதில் குறிப்பிட்டு சொல்லி உள்ளீர்களா என்றால் இல்லை. வா.சா.ஆ.4 Invoice ஆனது 08.08.2023 தேதியிட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ-4 ல் Despatch Date 07.08.2023 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அது Purchase order தேதி ஆகும். வா.சா.ஆ.4 ல் குறிப்பிட்டுள்ள வாகனம் (வாகன எண்.TN38 A E 1710) மூலமாக பிரதிவாதி நிறுவனத்திற்கு சப்ளை செய்ததாக சொல்லப்படுவதற்கு பிரதிவாதி நிறுவனத்திடம் இருந்து Delivery Note/ Acknowledgement பெறப்பட்டதா என்றால் Acknowledgement பெறப்பட்டது. அந்த Acknowledgement ஐ நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் வா.சா.ஆ-4 தான் அதற்கு சான்றாகும். வா.சா.ஆ.4 ல் பிரதிவாதி நிறுவனம் நீங்கள் சொல்லும் பொருட்களை பெற்றுக்கொண்டதாக கையொப்பம் செய்து கொடுத்துள்ளார்களா என்றால் பிரதிவாதி நிறுவனத்தின் முத்திரை மற்றும் கையொப்பம் உள்ளது. வா.சா.ஆ-4 ல் பிரதிவாதி நிறுவனத்தின் முத்திரை மற்றும் கையொப்பத்தையும் வழக்கிற்காக நீங்கள் தயாரித்து உள்ளீர்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ல் குறிப்பிட்டுள்ள படி எந்த பொருட்களையும் பிரதிவாதி நிறுவனத்திற்கு சப்ளை செய்யவில்லை, அதனால் தான் வா.சா.ஆ.4 ல்

பிரதிவாதி நிறுவனத்தின் எந்த Acknowledgement இல்லை, அந்த Acknowledgement நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்ற காரணத்தினால் தான் வா.சா.ஆ.4 ல் குறிப்பிட்டுள்ள Invoice எண் மற்றும் பொருட்கள் விவரத்தை வா.சா.ஆ.8 சட்ட அறிவிப்பிலோ, வா.சா.ஆ.7 போலீஸ் புகாரிலோ குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. 31.05.2024 தேதியிட்ட வா.சா.ஆ.10 பிரதிவாதியின் பதில் அறிவிப்பு பக்கம் 6ல் வாதியிடம் பெறப்பட்ட அனைத்து பொருட்களுக்கும் வங்கி பரிவர்த்தனை மூலம் பணம் செலுத்தப்பட்டதாக அட்டவணை கண்டுள்ளது என்றால் சரிதான், பிரதிவாதி அதில் ஒரு Invoice, தொகையை விட்டு விட்டார். வா.சா.ஆ.10 பதில் அறிவிப்பிற்கு பிறகு நீங்கள் தற்சமயம் சொல்லுவது போல் பிரதிவாதி ஒரு Invoice, தொகையை விட்டு விட்டார் என Rejoinder Notice அனுப்பினீர்களா என்றால் இல்லை. அவ்வாறு எந்த ஒரு Invoice இல்லை என்ற காரணத்தினால் தான் நீங்கள் Rejoinder Notice அனுப்பவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10ல் பிரதிவாதி உங்களுக்கு ரூபாய்.31,525/- கூடுதலாக வங்கி பரிவர்த்தனை மூலமாக சொல்லி உள்ளார் என்று சொன்னால் சரிதான், Invoice தொகையை interest உடன் செலுத்தியதால் அதிகமாக கண்டுள்ளது. ரூபாய்.31,525/- கூடுதலாக interestக்காக பெறப்பட்டது என Rejoinder Notice அனுப்பி உள்ளீர்களா என்றால் இல்லை. வா.சா.ஆ.10 ல் குறிப்பிட்டுள்ள பதில் அறிவிப்பு சங்கதிகளான அட்டவணை பட்டியலில் சொல்லி உள்ள பரிவர்த்தனைக்கு தனது வங்கி கணக்கு மூலமாக முழு தொகையையும் செலுத்திவிட்டதாகவும், நிலுவைத்தொகை பாக்கி எதுவும் இல்லை எனவும், ரூபாய்.31,525/- கூடுதலாக வாதியிடம் உள்ளது எனவும் வா.சா.ஆ.10 ல் குறிப்பிட்டுள்ள பதில் அறிவிப்பு சங்கதிகளை தனது எதிர் உரையில் குறிப்பிட்டு சொல்லி உள்ளார் என்றால் சரிதான், ஒரு invoice, தொகையையும் எதிர் உரையில் சொல்லிவில்லை. பிரதிவாதியின் எதிர் உரைக்கு Reply statement ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை, வழக்காடி வருகிறேன். வா.சா.ஆ-10 பதில் அறிவிப்பிற்கு Rejoinder Notice மூலம் மறுப்பு தெரிவிக்காத காரணத்தினாலும், எதிர் உரையில் குறிப்பிட்டுள்ள கூற்றிற்கு Reply statement மூலம் மறுப்பு தெரிவித்து தாக்கல் செய்யாத காரணத்தினால் வா.சா.ஆ.10 மற்றும் எதிர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுகளை நீங்கள் ஒப்புக்கொண்டதாக கொள்ள வேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 invoice க்கு GST கட்டியதாக ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வாதி நிறுவனத்திற்கு தனி PAN எண் உள்ளது என்றால் சரிதான்.

நீங்கள் வருடாந்திரம் வருமான வரி தாக்கல் செய்து வருகிறீர்களா என்றால் தாக்கல் செய்து வருகிறேன். உங்கள்  வருமான வரி கணக்கை சமன் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உங்களுக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.4 பிரதிவாதி நிறுவனத்திடம் இருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற காரணத்தினால் மோசடியாக ஏற்படுத்தப்பட்ட  ஆவணம் என்றால் சரியல்ல.  வாதி நிறுவனம் அல்லாது பிரதிவாதி நிறுவனம் வேறு நிறுவனங்களிடம் இருந்த பொருட்களை வாங்கி நன்கு வியாபாரம் செய்து வந்த காரணத்தினால் காழ்ப்புணர்ச்சியின் அடிப்படையில், அதாரமில்லாத சட்ட அறிவிப்பு, போலீஸ் புகார் அளித்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதி நிறுவனம் வாதி நிறுவனத்திற்கு எந்த தொகையையும் செலுத்த கடமைப்பட்டவர் அல்ல, தாவா பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல, தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in open Court read over to the Witness and admitted by the witness to be Correct.

CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI

Digitally signed by CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI
Date: 2025.11.13 17:51:46 +0530

Judge,
Commercial Court,
(Senior Civil Judge Cadre),
Coimbatore.